ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2473/05 - 2026 ජනවාරි මස 26 වැනි සඳුදා - 2026.01.26
*2473/05 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 154ஊ (1), (2) ஆகிய உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகள் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32 (1)ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் வட மத்திய மாகாண கௌரவ ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரகாரம், அவரால் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் வட மத்திய மாகாண சபைக்குரிய மாகாண அமைச்சுக்கள் 05 இனது விடயங்கள் பின்வருமாறு திருத்தம் செய்து அந்த புதிய மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என கௌரவ ஆளுநரின் ஆலோசனைப்படி இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

01. வட மத்திய மாகாண சபையின் அமைச்சுக்களின் விடய திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கை நிருவாக சேவையின் விஷேட தரத்தைச் சேர்ந்த - திரு. கே. எம். எச். எஸ். கே. ஜயலத் அவர்கள் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் மீள் பணிப்புரை செய்யப்படும் வரை வட மத்திய மாகாண பிரதான அமைச்சு மற்றும் மாகாண கல்வி, தகவல், தொழில்நுட்பம், சட்டம், சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், விஷேட கருத்திட்டங்கள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராக.

02. வட மத்திய மாகாண சபையின் அமைச்சுக்களின் விடய திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கை நிருவாக சேவையின் விஷேட தரத்தைச் சேர்ந்த - திரு. எம். சிரீஸ்கந்த குமார் அவர்கள் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் மீள் பணிப்புரை செய்யப்படும் வரை வட மத்திய மாகாண கூட்டுறவு, வர்த்தகம், மற்றும் உணவு, போக்குவரத்து, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக.

1A - PG 7494 — 04 (2026/01)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. வட மத்திய மாகாண சபையின் அமைச்சுக்களின் விடய திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கை நிருவாக சேவையின் விஷேட தரத்தைச் சேர்ந்த - திருமதி ஆர். எம். டீ. பீ. புஷ்பகுமாரி அவர்கள் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் மீள் பணிப்புரை செய்யப்படும் வரை வட மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக.

04. வட மத்திய மாகாண சபையின் அமைச்சுக்களின் விடய திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கை நிருவாக சேவையின் விஷேட தரத்தைச் சேர்ந்த - திருமதி சுபாஜினி மதியளகன் அவர்கள் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் மீள் பணிப்புரை செய்யப்படும் வரை வட மத்திய மாகாண விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசனம், விவசாய உற்பத்தி விற்பனை, கால்நடை உற்பத்தி, மிருக வைத்தியம் மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சின் செயலாளராக.

05. வட மத்திய மாகாண சபையின் அமைச்சுக்களின் விடய திருத்தங்களுக்கு ஏற்ப இலங்கை நிருவாக சேவையின் விஷேட தரத்தைச் சேர்ந்த - திரு. எஸ். குணபாலன் அவர்கள் 2026.02.01 ஆந் திகதி தொடக்கம் மீள் பணிப்புரை செய்யப்படும் வரை வட மத்திய மாகாண உள்ளூராட்சி, பெருந்தெருக்கள், கிராம அபிவிருத்தி, வீடமைப்பு, சுற்றாடல், மகளிர் விவகாரம், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராக.

**(நந்தன கலபொட)**,
வட மத்திய மாகாண ஆளுநர் செயலாளர்.

வட மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம்,
2026, சனவரி 21.

EOG 01 - 0267